உ

சிவமயம்.

பாலையானந்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சச்சிதானந்தமாலை.



சென்னை.

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

1922,

உ

சடவுள்துணை.

சச்சிதானந்தமாலை.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மூச்சுடராகிபொன்றாய் முடிந்ததோர் சோதிபாதம், அச்சுதனயனுங்காணா வகண்டமாயளவிலாத, சச்சிதானந்தஞான சதாசிவகுருவைப்பாட, மெய்ச்சுடருதயமான விளக்கொளி யுண்மைசெய்வாம்.

கண்ணுக்குண் மணியானின்ற காரணக்குருவைபோற்றி, வண்ணுக்கு வொளியைப்பார்த்து மெய்ப்பொருவ விளக்கமாக, மண்ணுக்குளெவர்க்கு ஞான வழிதனை யுணர்ந்தோர்க்கெல்லாம், ஒண்ணுக்குளொன்றாய்நின்ற வுண்மையையுரைக்கலுறறேன். 2

இரட்டையாசிரியவிருத்தம்.

முத்தமாய்நின்றபர நாதவொளிகீதமொரு மூச்சந்திவீடுநடுவின், மும்மலமகற்றவொளி நிர்மலசொரூபமாய் மூச்சுடரினுச்சிமுடிவில், உத்தமாதேசிபரிசித்தமாயஷ்டதிசை யூடாடிவெட்ட வெளியில், ஒளியாகிவிரிகடரி ஹதயகிரியணையிலே யொருநாலு மிருநாலுடன், நித்தமாய் நிறைபரிபூரணசதாசிவ நிலைகொ

ண்ட சோதிமயமே, நின்மகிமைகண்டுளே தெண்ட னிடுதொண்டர்தன்னினைவுசற்றபராமலே, சுத்தமாய் நின்றமணி ரத்னவொளிதீமே தரல்வேண்டுமிதுசம யமே, தற்பரானந்தசபை நிஷ்களர்ன்னந்தசிம சச்சிதா னந்தகுருவே. 1

பொற்பிரபையாகியொரு வச்சிரமலையுச்சியிற் புன் னைமல்ரண்ணமலரோ, பூத்தமலர்வாசனையி னுற்றமல ருறுதேன் புன்னுனியின்மணிபோலவே, நற்பவளவ ரையிலே யுற்பனமதாகவே நவில்கின்ற நாதகுருவே நாராயணபனம் வேதாவிணைதமன னந்தசிவசாம்ப சிவனே, சொற்பொருளிலாததோர் கற்படிக்ரூபமாய் த்துய்யமதியாகவெளிபில், துரியமுதலாகாய வழிசிசு ரமணியோசை சொல்விம்மிநின்றபரமே, தன்புருஷ நிலையிலே விற்புருவநடுவிலே ஸ்தாபித்தசீர்பாதமோ தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்த குருவே. 2

ஓட்டாதுபாசவினை யென்னுநின்னேர்கன் யோ னிசிறுகேணியளரில், உழல்கின்றபலமோகவெறிகொ ண்ட நிர்மூடருடல்கெட்டு முறிபட்டபின், கிட்டாத ருந்தபசு முற்றுதிரங்குதுரை தேடுவவிவெகுதூரமா ம், கேசாதிபாதமல வீராறுகால்கொண்டு கீழ்மேலு மாராய்ந்துபார், யெட்டாதுவெட்டவெளி கொட்டா வியிட்டுகழி யிடோடுசுடுபொட்டலாய், ஏமமொருகா

லபழி யாதமாஜோதியொளி சயல்லநில சொல்லவெ
ளிதோ, தட்டாதுநிட்டையிலு மொட்டாதவட்டவே
தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்க
ளானந்தசுவ சச்சிதானந்தகுருவே. 3

மூற்றுமோமுத்திபெற வைச்குமோசித்தமது மூப்
பாழின்மூப்பதியின்மேல், மூதண்டகூட முகடாகநி
ன்றநாதமே முழிசுளையிலணுவாகியே, வத்துவால்வி
த்திலொரு சித்தாகிரத்னதணி வந்தசிறு வாசல்வழி
யே, மடைவாயில்பட்சிபோனடைபார்த்திராது நீமற்
றென்னகற்றறிமையா சுத்தவைதூடல்வைத்த சீர்பா
தமதுசூக்ஷ மாதிசூக்ஷமனடனப, தொண்டரிருகண்
கள்விழி கொண்டழகுகண்டபின் சொல்லேதுபொரு
ளேதுகாண், சற்றுமோகிட்டவ்லை நெற்றிநோட்டச்
சுழி தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தசபை
நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 4

முக்கோணவட்டமொரு சிறுவீடுகட்டியதின்முன்
னிறை ஜோதிவெளியின், முத்திசிவசத்தியாய் மத்தி
யாமதியத்திலே முதலெழுத் தூன்றிநடுவே, உட்கோ
ணவ்ளையமாய நாற்கோணமீதிலே விசுவாச நிசுவாச
மாய, ஊமையுயிராகமதிலாமையுருவாகியே யுண்மை
குருவேட்டுவனுமாய், அக்கோணவீதிமுத லாகாய
மேன்முதல் மாதாரபாதகமலம், ஆணிநடுமேருகிரி
யூடுநடுமுடிவிலோஷ்டா கூரத்துவிரிவாய்ச் சட்கோ

ணைமுற்றவெளியப்பாலிருந்தபதி தாள்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 5

மூலமணிபூரக மநாகதம்விசுத்தியின் மூவிரண்டாறுமனையாய், முச்சந்திவீதிநாகருச்சம்பளீரென்று மூடுதிரையாகுமதிலே, கோலமணிநாராச மேலையொருசிறுவாசல் கோழைபறல் வேண்டுமனமே, கோடிபலநூலரிவு வேதமுறைபேசினுங் குருபாதம் வெளியாகுமோ, நீலமணிபாபரண வாலகுரு சுவாமியாந் நின்றநிலைகண்டதெவரோ, நேமிசிவகாமிசர்வேசரிருதாளை. னது நேராகநெஞ்சுகடுவே, சாலவெனுமாமோகவேலையறவேளான சாயுச்சியபதமருளுவாய், தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே 6

சுந்தரசௌந்தர நிறைந்த பரிபூரண சுயம்புப்பிரகாசவெளிபில், சுத்தமயபடிகமாய் நித்தியநவரத்தினமாய்த் தூண்டாத தீபவெளியாய், மந்திரசடாட்சரவிலக்ஷண முதற்சயல் வச்சிரமயதற் சொரூபமாய், மகேசுரசதாசிவ சிதம்பராம்பர மலைன்மயசிரோன்மணியனே, அந்தனிர்புரந்தரானந்தரிஷியும்பருடனே சிவயோகவிருளே, யாகம்புராணகலை யோதியதபேசதனர்களடிதொழுது கதியடையவே, சந்தனசுகந்தராகந்தமரவிந்தபதிகரல் வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே.

அன்னமயஸ்தூலமாயுண்மையுயிராகமாயநுபோ
கசநுகரணபாய், அறிவுதருமுபதேச குருநமச்சிவாய
மாயடிமைகுடிகொண்டபரனே, வன்னமலபேதவுமை
தன்னிலுழலாமலே பருவியிரு பாதமருள்வாப் மது
ராக கருணைமாரொழுகுதிருகனகசபை வடிவாகி யெ
ன்றனுளமே; சொன்னமயமாகவுளர் விண்ணிலெளி
தாளை சோதிமதி யாதிபதியே, சுக்கிலசுரோணித
வகைக்கொருவிதைக்கருவி தோன்றுவதுநீயாகையா
ல், சன்னமயமாகவரு மின்னெளிவேயறிவுதரல் வே
ண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்த
சிவ சச்சிதானந்தகுருவே. 8

அம்பரவிலாசமாயின்பசுகமோகாயண்டபகிரண்
டவெளியாய், அகண்ட நவகண்டமா யெண்டிசைய
னேகமா யளவாகிநின்றதொருவாய்ப், பம்பரமிதேது
சன சங்களவிசாரநப வஞ்சமன மஞ்சுதொழிலாய்,
பழவினையிலெனது சடமென விதேதவகை பகரு
மொரு பரமவணுவே, உம்பரறியாதபதி யெப்பவள
வரையிலே யூன்றுதலையாருமறிவர் ஓம் நமசிவாயசிவ
ஞானகுருதேசிகா வுண்மைகுடிகொண்டவடி வேதம்
பரமதாகிய சிதப்பரவிலாசமே தரல்வேண்டுமிதுசம
யமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதா
னந்தகுருவே. 9

விரிகின்றகருணைமல ருறைகின்றசிவசோதிவிட்ட
ருறைதொட்டதெனவே, விதிலிகித மிதவென்றுமித

மகிதமறியாவ விண்ணிலெளி கண்ணி னளவாய்த் தெரிகின்ற தொருசிந்தை யறிகின்றதறிவென்று தெளியாதவிழி குருடரே, திணையளவுநினைவுசற் றயராம லங்கனை கியவெளிகாண வொளிதோ, எரிகுப்பிமல மாயை யறைதங்கிவருபாச மிதுவைந்து பொடியாக வே, இடியேறிகொனியோசையடி மூலமுடிதாடியே காந்தவெட்டவெளியில், சரியென்று நிலையென்று பரி கொண்டு பெருசிந்தை தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்த குருவே. 10

செக்கரிளமதிவதன் மிக்கதிருமுக்கமல சிவகாமி யுடனேசனே, சித்திதருவாயுனது முத்திபுரிவாயென துசிவஞானகுருதேசிகா, சொக்கமகமேருகிரி யுக்கிர நடுவாகியே துணுகி நின்றநடனம், சோதிமனமாகி பொரு நாதவொளிகேதமே தோன்றுவது பாதகமலம் மெய்க்கருணைபெருகிரசவர்க்கமல தொழுகுதேன் வெ ய்யசிவதுய்யகனியே, விட்டகுறையனு போகாதொட் டதிருவெட்டிலே ளிரிசத்திபுரியக்கர, சக்கரமுமீராறு நிற்கவொருமிக்கவே தால்வேண்டும் மிதுசமயதமதற் பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதாநந்தகுரு வே. 11

கொள்ளிக்குவிள்ளாத கூரிருளிலாகாயம்குறையு மோ வெளிமறையுமோ, கூழுண்ட பாண்டமிதுர்சளு

ண்டுபோவதோர் கூற்றையுயிரூத்தைமனமே, வெள்ளிக்குபந்தமதி வெண்ணிலவுதோன்றவே வெளியாகி வழிகாணவும், விரலமிதுதெளியாத கவலைகுடிதொண்டதொரு வீணைகாயமிதிலே, தள்ளிமுத்திரிகரணகள்ளப்புலன் பொறிகருண்டகண்டிதமாகவே, தொந்தவினைதந்தவுடல் கட்டுவிடவெட்டவெளி கொக்குநிலைபொக்குமலையைத், தள்ளிக்கிறைக்குடில மெள்ளத்திறந்துசெய தரல்வேண்டுமிதுசமயமே, கற்பரானந்தசபை நிஷ்களாந்தசிவசச்சிதானந்தகுருவே. 12

கட்டாத காளைதெரு விட்டோடிமீளவரு கண்டுகொள்ளாதவிதமோ, கவலைமறைவிரிகொம்பு சிவலைமாக்காளைவெகு கடினமதபிடிபடாது, தொட்டாலு மூட்டுமது கிட்டவரவொட்டாது சுழிபேதருணகூர்மையாம், சூக்ஷமமிருகாலைகொம்பு பாய்ச்சலதுபாயாமல் துவாதசாந்தத்து மெளியின், மட்டாதநிட்டமுறை கட்டுதறைகிட்டுவது பரிகயிறு பரியெட்டிலுல்லையாளியாடாம லுப்பவேவிட்டுவிட யையமதுமெய்யுமிதுவே, தட்டாமல்தட்டிவரு காளையதுபாயாமல் தற்கார்த்துரட்சிசமயம், தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 13

ஆடல்புரிநடனவிரு பாதபங்கயவேதமாவதாசிவகோணமாம், அருபறையிலெட்டாத திருநடனவிஸ்தாரமானதொருபானுமதியே, கூடவொருதிரிகோண

வீடுதரு நவகோண மோணமிசை நிசைநாலுமே,
கோதையபிராமியிரு பாதவொளிநாதமே கோடான
கோடிநடனம், பாடலனுகீதசபையோக சிவரேகை
வெளிபரமாயசத்திவடிவே, பாரமகமேருகிரி வூடுரு
விமேலானபாலனேயபாதகமலம், சாடவனுபோக செ
யலோகமுதலாயவே தால்வேண்டுமிதுசமயமே தற்பரா
னந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே.

திருமேவுசோதியாய்ப் பிரபையொளி வீதியே
தெருவிலொருபாதையதிலே, திரிகரணசுத்தியாய் மு
தகலகத்திலே தேனமுதமூறுகனீர், வருமொருவர்
காணவேதிருகுசுழிசுணியில் வரவுசிறுவாகவெளிவு,
மயிர்ப்பாலமீதினி னெருப்பாறுதாவியே வர்தவழிக
ண்டதெவரோ, அருவுருபிலாகாச மிருசரணகீதமே
யனேச்சிவசோதிநடனம், அபயவரவுபயசிவசமயகு
ருநாதனே யத்துவிதமுத்திபெருவாய், தருமவனசு
ழிமூனேபினணுவளவுகவனமே தால்வேண்டுமிதுசம
யமே, தற்பரானந்தசபைநிஷ்களானந்தசிவ சச்சிதா
னந்தகுருவே. 15

முத்தாடிபரவுமிரு கமலபதமிதுவென்று முன்
னின்றஞானகுருவே, முனேயாகிமூலமொரு கலேபாகி
வெளியிலேமுனேயாகியோகவிரிவாய்ப், பித்தரொகு
மித்தனிதிசற்றுமடவார்களோ பெருமையதுசிறுமை
யதுவே, பேசாதிருந்தசெயவாசாளிருந்தபதி பேறு

ருக்காணவெளிதோ, பாதரடிபணிவிடைகளைத்தனை யநேச்கிவ பரமகயிலாசபலமேல், பகரவெறிகிரண வொளிவிசிறிமதிபெருகுநதி பதியிலகுசோதியதிலே, தத்திமதியத்தவளைசுற்றிவருசுத்திவழி கரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 16

உனதுசெயலுனதறிவு வுனதுணர்வுவுனதுபொ ருளுன்மையுயிரானபரனே, ஊருனதுபேருனது வே ருனதுதூருநதியுய்யும்வேருனதிலேயே, எனதுபயமே னதுசடமென்னுளுமென்னுளை யெள்ளளவுதள்ளமு டியா, திப்படியிருந்தடிமையெந்தவிதம் வந்தவழியி டேரவந்தமுடியும், மனதுமதிமனதுவெளிமனதொ ன்றிமனதன்றி மாசற்றவாசமலரின், மாருடிநின்ற பரியீராறுகால் கொண்டுவானேறவிட்டபரனே, தன துபதியிதுவென்று மறிவுதருசிவசிந்தை தரல்வேண் டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசி வ சச்சிதானந்தகுருவே, 17

ஓட்டிலேபட்டசிறு பட்சிபோலாகியே யுழல்கி ன்றபேதைமனமே, உள்ளமேகோயிலொரு வள்ள லேதாணுவாயுன்னைவிட்டகலாமலே. நெட்டிலேதிரி கின்றபட்டமிடுபுரவிபோ னீங்காதகாலனானை, நீயதி யமுற்றுமலோரறிவுகிட்டாம னீயேங்கி நீமடிகிறுய், எடடிலேரண்டிலேமட்டிலே கட்டிலேயிரெழுத்தோ ரெழுத்தால், இசையாதமந்திரமுமசையாதிருத்தியே

யெல்லைபெற வல்லபெரியோர், சுட்டிலேநிஷ்டைமு
றை யிஷ்டமாய்நின்றபடி தரவேண்டுமிதுசமயமே
தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்த
குருவே. 18

விடையேறுசடையாளரடையா முடிசூடவே
ண்டுமதுதாருமெனவே, விண்ணப்பமொன்றுளது க
ண்ணப்பனருடையமேலையூர்போதுமெனவே, இடை
யூருவாராது குடியேறவொரு வீட்டிற்போது தப்பா
மலே, இனியதொருவாசமலர் மகிமைதருநாசிமுனை
யிருவழியுமொருசுழியிலே, கடைகோடிமனையிலேயி
டைவிடாரகசியங் காட்டொணாதந்தரங்கம், கனகச
பைகொலுமேடையனவிரதகலியாணங் கண்கொளா
தந்தருடனம், தடைபடாமகுடமுடிவடிவானகுரு பத
ந்தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபைநிஷ்
களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 19

பரமண்டலங்கனக சபைமண்டலம்வடிக பதிம
ண்டலம்தவமதாய்ப், பரிவிண்டலம்புகுதமதிகுண்ட
லங்குடைகள்பணிகங்கணங்கிரணமே, உரமண்டலம்
பெரியதரமண்டலந் தெரியவுண்மைபங்கணண்புபரிய, ஒ
ளிமண்டலத்தரிசி வொளிமண்டலம் பெரிசுயுகமண்ட
லஞ்சிரசதாய்ச், சிரமண்டலங்களைவைகுடிகொண்டல
ங்குசடை சிவசம்பசாம்பசிவனே, ஜெகமண்டலம்பு
கழரவிசம்ப்பிரமங்ளொடுதிருவம்பலமபரவலே, த
ரமண்டலங்களொடு நடனம்புரிந்தகழல்தரல்வேண்டு

மிதுசமயமே தற்பரானந்தசசை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 20

நந்திநாதப்பராலிந்தநரதத்துகளை நம்பினேனிப் பொழுதுமே, நன்பனுருட்கருணை பொங்கியேமெய்க் கமலமன்றுபாலிக்கவருமே, இந்திராதித்தருடனந்த மூலப்பொருளை யின்பசாரசமதுரமாய், எந்தவேனைக் கறிவுவெந்த வேளைக்குதவுயென்று போதித்தருளு வாய், திந்திதாதிகுசந்ததாளத்திணைடுமே செஞ்சர ணநிர்த்தநடனம், செம்பொன் மேருக்கிரியினின்பமா மூத்திதருசிந்தைமயமற்றகுருவே, சுந்திராதித்தரிகு விந்துநாதத்தொனியின்தங் குபரதற்பிரமமே, தற்ப ரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்த கு ருவே. 21

வானுகியேகமொரு காலாகிலோகமாய் வகைநா லுமரிவாய்வதவி, வடிவுபலரூபமாய்நிலைசராசரமும மாய்வந்தவதரித்தபொருளை, யானதியுமொருதாயாகி வாசமலரணுவாகினனேயுமே, அன்றெழுதுவிட்டநீ யென்றறியமுற்றுமோ வபிஷேகமுடிமீதிலே, தேனு கிமேருகிரி பாலானபாதமது பதரிசிக்கவெதிர்நிற்கு மோ, சித்தகயிலாசகொலு நாதவொயிலானதாரு சுவசிவாதீபவொளியே, தானுகிமூலமுதலாதாரபாப மே தரல்வேண்டுமிதுசமபமே, தற்பரானந்தசனித ஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 22

நீருமாகியொருசாரண கடாட்சமாய்நெறிமுறை
மைதவறுமலே, நினைவுதருமுபதேச வறிவுசிவகுரு
வாகநேசமறவாதபொருளே, மாரூபரூபமெனரேகை
வெளிவொளிவிலே வாசுபணுமகுடமேல், வரவேண்
டுமிருபதப்பெறவேண்டு மடியேனுமகமேருவடகிரி
யையே, கிருபாவிலாசமலரோ நமச்சிவாயமே தே
வாராதிருவாசகா, சிந்தைகுடிகொண்டவளு மென்ற
னிடசுவாமியே சிவஞானபரிபாலனே, சாரூபசாயுச்
சியபாதாரவிந்தமே தரல்வேண்டுமிதுசமயமே, தற்
பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்த கு
ருவே 23

கணப்போதுபிரியாத குணப்பூதவகையானகலை
ப்பாலுமலைப்பாலுமலைப்பாகவே, கருவிபலசரணதி
பலனுசைசைக்ஷமீடுமெய்ம்மீறிலல், அணுபோதுவிரு
ப்பான திப்ரமபப்பதைதநல் வரப்போகுதோ, அழுக்
காணமலக்காடு செடித்தூறுவிலக்காதவடிப்பாடு சுறு
பாதைதகாண், துணைப்போகமுடியாதினைப்பாறநிலையா
துசொல்லக்கேளு மணக்காய்யே, துடுக்கானதலைக்
காவனெறுப்பாறுமயிர்ப்பாலச்சுருக்கானபொறுக்கா
கவே, கூணைப்போதுதனைத்தேடு கருப்பூரதீபமேதர
ல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களா
னந்தசிவ சச்சிதானந்தகுருவே. 24

முனையாதுகழியாது தனையேறவழியேது முடி
கூடுதுறையேதுகாண, முதுஞானிகனியூறல் கதிரோ

னுமறியாத மூனைமீதிலனுவாகியே, தினைபானகொ
ருரேனுவரலாறுமினையான சிவரூபவிபரீதமே. தெ
ரியாதிதெவராலுமரிதான வெளிமாபைதிருமூலர் தா
முமறியார், வினையூறுமலநாறு பழுவானவினை கூடிவி
னையாடியலைமோதியே, விழுகாயமுதமாய மறியாம
னுறவாடிவிதிமோசமதிமாயையார், தலைபாயவறியாத
தவெனைகீயுமறவாதுதால்வேண்டுமிதுசமயமேதற்பரா
னந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே.

சிவகிருபைசிவமகிமையறிவுதனை யறியாதசென
னமதுதனைபறுத, திருநடனபரிபால நடனசபையொ
யிலான திருநயனமழுமானுமாய், நவநினைவுபலவான
மனதுகனையறமோதிநடுவனைபிடுமனையிலே, நளின
மற்றனைபெருகுசிறிகு மிருதுளியருளி நாயேனையா
வனினைவாய், இபனைருவனவனென்று தனையறியதா
னில்லையேகமுதலாகாயமே, இதுமதியுமொருமதியில்
வருமளவு தவறுமலிரவுபகலாகமதிலே, தவமகிமை
நியானகதியுடைய விருபதந்தால்வேண்டு மிதுசம
யமே, தற்பரானந்தனசபை நிஷ்களானந்தசிவசச்சி
தானந்தகுருவே 26

அபனைருவ னரியொருவரைனைருவ னுகவிம்
மூவரையுமனபாகவே, அருளுமொழிகுருசுவாமி யி
விடமலவெகுதூரமதுவரியவெகுவருஷமாய் வியனுல
குதெரியாரகசியமிதாரறிவர் விரிகமலகருதி முடிவு
விடைவுபயிர்முனையுகுத விடமுமொருதுகள்ளவு மி

டைவிடாதேதகவெளியில், புயனுதவதவதானம்பதியா
ளுமினிதாவிபரமகுருநாதசிவனே, பதியணுகுபகரா
சவினையகலவிடவேண்டும் படிசமயதவளவடிவேல்ரு
மயமொருமலரணையிலொலிநடன மணியோசைதசய
வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபைநிஷ்களான
ந்தசிவ சச்சிதானந்தகுருவே. 27

பகலிரவுமதியிரவி வருதிசைகளுக்குவெளிபரம
வணுதனியளவுமாய்ப், பகருமொருவிவருமிஃ தெவ
ருமறியாதசெயல் பவுரிகையிலாசமெனளே, உலமுடி-
வுதினையளவுதனையறிய முனைபெரிய துறுதிவழிபறு
திநிலைபார், உதயமிருபதசரணகிரணமணி கலகலென
வுரகபடநடுமுடியிலே, அகமகிழவருபரம குருநமசி
வாயமே யத்துவிதமுத்திபுரிவாய், அழகுதிருமணிம
குடமுடிசடையுமறிமழுவு பரவரவும்பயமுடனே ச
கலகலையமிர்தகுண விகிதநபரிஷ்பவிடை தரல்வே
டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ
சச்சிதானந்தகுருவே 28

நாலுமறையறியாதயோகபரவொளியிலே ராகம்
னுரகதானியாய், நடுனுனிநடுவாகிபிடைகடையாகி
நாதகயிலாசவொளியில, காலுதலையதுவாகியேறுது
றைமுறைகூறு காசிநகருசிதுருவம், கதலிமனமிடுகா
டுபடுகுழிகள்சிறுகாதை கடுவெளியிலாவுநெளிவுபோ
லுமது விருவானமூடுதிறை .பறவீசுபொருமது மா
வெகுளி, பூதபொறிபுலனைசேது மிலைநிலையாதபு

ருவாடுமதியடையவே, சாலுமிதுபாலுநெல்போலும
துதெளியவேதரல் வேண்டுமிதுசமயமே, தற்பரான
ந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதாந்தகுருவே.

பரமுமிதுபொருளுமிது வழியுமிது தெளிவுமிது
பதிஞானலோகமிதுவே, நிராசவினையாசெனதுமோக
மேமோசமிது பாருறவுபாழானதே, ஊமுமூருகா
லோசையிரவுபகலன்றியே யுடசராசரமுமிதிலே, ஓ
ளிவொளியிலொளியாகி யுபநிடதநடனமாயூழிவிதிலா
ழியெனவே, சிரமகுடமுடியிலே கனகமணியிசையி
லேசிவஞானதீபமதுபார், திருமருவுசிவசோதி மதி
பெருகு கதிவீடுதெரிசனைகளாதிமுடியும், சரமுமது
பதிசேவை சகலகலையனுராகசாயுக்சியபதமருளுவாய்
தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்த
குருவே. 30

சச்சிதானந்தமென்னுந் தண்மைமைய மகிழ்ந்து
கேட்போர், உச்சிமேற்பார்வையாகியுள் வெளிதிரந்து
மூப்பாழ், வச்சிரவொளியுந்தாண்டி மகிழ்ந்தொருவா
சல்கண்டு, நிச்சயநிஷ்களத்தே நிராமயச்சோதிசேர்
வாம்.

சச்சிதானந்தமாலை-முற்றிற்று.